## 15. பிறனில் விழையாமை

**141.** *பிறன்பொருளான் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்*
*தறம்பொருள் கண்டார்க ணில்*

**மற்றவர் மனைவியை விரும்புகின்ற**
**மடமையும் அறியாமையும் கிஞ்சித்தும்**
**மனதில் அறத்தின் பொருளை உணர்ந்தவர்களிடம் இல்லை !**

**142.** *அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை*
*நின்றாரிற் பேதையா ரில்*

**பிறர் மனைவியை விரும்பியதால்**
**பித்தம் பிடித்து பிறர் வாயிற்படியில் நிற்பவன்**
**பிற பாவங்களைச் செய்பவர்களை விட**
**பிழை மிக்க கொடிய பாவி ஆவான் !**

**143.** *விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்*
*தீமை புரிந்தொழுகு வார்*

**நம்பிப் பழகியவர் வீட்டில் அவரின்**
**நற்துணையுடன் காமம் பாராட்ட நினைப்பவன்**
**நல்லுயிர் இருந்தும் பிணமாவான் !**

**144.** *எனைத்துணைய ராயினும் என்னாந் தினைத்துணையும்*
*தேரான் பிறனில் புகல்*

**அறிவின்றி பிழை புரிகிறோம் என தினையளவுக் கூட**
**அறியாமல் – அயலான் மனைவியை விரும்புவது**
**அளவில்லாப் பெருமையுடையவரையும்**
**அதல பாதாளத்தில் தள்ளி மதிப்பிழக்கச் செய்யும் !**

**145.** *எளிதென இல்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்*
*விளியாது நிற்கும் பழி*

**எளிதென்று எண்ணிப் பிறன் மனைவியை**
**எண்ணத்தில் கொண்டு முறைகேடாக நடப்பது**
**என்றும் அழியாத பழியைத் தந்திடும் !**

146. *பகைபாவம் அச்சம் பழியென நான்கும்*
*இகவாவாம் இல்லிறப்பான் கண்*

**பகை, தீமை, அச்சம், பழி – என நான்கும்**
**பயம் உறுத்தும் குற்றங்கள் என்றும்**
**பிறன் மனைவி விரும்புபவனை விட்டுப்**
**பிரிவதில்லை !**

147. *அறனியலான் இல்வாழ்வா னென்பான் பிறனியலான்*
*பெண்மை நயவா தவன்*

**அயலான் மனைவியிடம் பெண்மையை விரும்பாதவனே**
**அறநெறி தவறாது இல்லறம் புரியும்**
**அறநெறியான் !**

148. *பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்*
*கறனன்றோ ஆன்ற வொழுக்கு*

**பேதமையோடு பிறன் மனைவியை நோக்காதவன்**
**பேராண்மை கொண்டவன் ! அத்தகைய**
**பேறு கொண்ட சான்றோனுக்கு அதுவே**
**பேர் பெற்ற அறமும் ஒழுக்கமும் ஆகும் !**

149. *நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்*
*பிறற்குரியாள் தோள்தோயா தார்*

**உலகில் உடலும் உள்ளமும் சார்ந்த**
**உயர்ந்த பெருமைகளையும் நன்மைகளையும்**
**உடன் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் பிறருக்கு**
**உரிய மனைவியின் தோளைத் தீண்டாதவரே !**

150. *அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்*
*பெண்மை நயவாமை நன்று*

**அறம் கடந்து தீமைகள் பல செய்திருந்தாலும்**
**அயலான் மனைவியை விரும்புவதை**
**அறவே ஒழித்தால் எப்போதும்**
**அவனுக்கு நன்மையே !**